தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2019 சுறவம் (15-2-1989) ஓர் உருபா (இதழ் எண்: 116)

கலைஞர் வெற்றிக் களிப்பில் மிதந்து விடக்கூடாது; எதிரிகள் மிக வலிவானவர்கள்; அதனால் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும்!

முன் செய்யத் தவறியவற்றை எண்ணிச் செய்யவும், முன் செய்த தவறுகளைத் தவிர்க்கவும் வேண்டும்!

கிடைத்துள்ள வாய்ப்பு அரிது; எனவே இப்பொழுதே தமிழ்க்கும், தமிழ் இனத்திற்கும் நிலையான முன்னேற்றத்திற்கு அடிப்படையானவற்றைச் செய்து கொள்ள வேண்டும்!

ஆரவார, ஆர்ப்பாட்ட, விளம்பர விழாக்களை அறவே தவிர்க்கவும்! அவற்றால் மக்கள் மயங்க மாட்டார்கள், வெறுப்படையவே செய்வர் என்பதற்கு இந்திரா, செயலலிதா--கட்சிகளின் தோல்வியே சான்று!

Scanned with CamScanner

தி.மு.க. ஆட்சியினர்க்குப் பாவலரேறு அவர்களின் அறிவுரையும் எச்சரிக்கையும் வேண்டுகோளும்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

"தொட்டி நீலத்தில் சுண்ணும்பு கலந்த கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது" என்று பாவேந்தர் தம் '***குடும்ப விளக்கில்***' கதிரவன் எழுச்சியையும், இருள் விலகலையும் மிக அழகான உவமை நயத்துடன் எடுத்துக் காட்டுவார். அந்தப் பாடல் அடிதான், தேர்தலில் ***திராவிட முன்னேற்றக் கழகம்*** மிகப் பெரும்பான்மை பெற்றது என்ற செய்தி சொல்லப் பெற்ற பொழுது நினைவுக்கு வந்தது. ஆம்! கலைஞர் வெற்றி பெற்ற அன்று தொலைக்காட்சி உரையில் அவர் குறிப்பிட்டது போல், "கடந்த 12 ஆண்டுகளாகத் தமிழகத்தைக் கவ்வியிருந்த இருளைப் போக்கி, 1976-இல் விட்ட இடத்திலிருந்து பணிகளைத் தொடங்குவோம்" என்பது முற்றிலும் உண்மையே!

தமிழகத்தைக் கவ்வியிருந்ததும் கவ்வியிருப்பதும் வெறும் இருள் மட்டுமன்று; அச்சுறுத்திப் பேய்கள் நடமாடிக்கொண்டிருந்த கும்மிருட்டு! தமிழக அரசியல் வானில் இந்தக் கால நிலை, பண்டைக் களப்பிரர் கால நிலையோடுபொருத்தி, முன்னுள முதல்வர் ம.கோ இரா. மறைந்த பொழுது எழுதப்பெற்ற ***தென்மொழி*** ஆசிரியவுரையிலேயே சுட்டியிருந்தோம். அந்த இருளும் மருளும் இணைந்த சூழ்நிலை மறைய, எழுச்சிக் கதிரவன் தன் ஒளிக்கதிர்களைப் பாய்ச்சி எழுந்து விட்டான் என்பதில் நம்மோரன்ன அனைவர்க்கும மகிழ்ச்சிதான்! ஆனால் அம் மகிழ்ச்சி நிலையாக இருப்பதும் இடையிலேயே அது மறைந்து துயரமான சூழ்நிலை தோன்றுவதும் தோன்றமலிருப்பதும், இனிமேல் ஆட்சி நடத்த முனைந்து நிற்கும தி.மு.க.வின் செயற்பாடுகளையும் கலைஞரின் வழி நடத்துதலையும் பொறுத்தவையாகும்.

இவ் வெற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி என்று அனைவருமே கூறினாலும், நம்மைப் பொறுத்த வரையில் இது முழுக்க முழுக்க கலைஞர் கருணாநிதிக்கு, அவரின் உழைப்பிற்கும் ஊக்கத்திற்கும் ஆர்வத்திற்கும் அயர்வின்மைக்கும் கிடைத்த வெற்றியாகும். இதை, இன்றைய நிலையில் தி.மு.க.வின முகாமையான எதிர்க் கட்சியினராகிய மூப்பனாரே, அவரையறியாமல் மிகப் பெருந்தன்மையாகவும் பெருமிதமாகவும் பணத்திற்காகக் கூறியுள்ளார். (என்ன இருந்தாலும அவரும் தமிழர் தாமே! ஆனால் கொஞ்சம் திசைமாறிய தமிழர்! அவ்வளவுதான்!)

தி.மு.க.வின் வெற்றியைக் கலைஞர் வரவேற்று மகிழ்ந்ததை விட, வட விந்தியத் தலைவர் சிலர் பாராட்டிக் கூறியதை நாம் முகாமையாகக் குறிப்பிட்டுச் சொல்லுதல் வேண்டும்.

சென்னைக் கடற்கரையில் நடந்த நன்றியறிவிப்பு விழாவில் தேசிய முன்னணி அமைப்பாளர் வி.பி.சிங். தி.மு.கவின் வெற்றியை வரவேற்று வாழ்த்திப் பேசியது, எதிரிகளுக்குக் கூட சில உண்மை உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்குமென்று நம்புகிறோம். அவர் கூறிய சில கூற்றுகள் இந்த வெற்றியை அவரே பெற்றது போன்ற ஒரு பெருமிதத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன.

"வள்ளுவர் கோட்ட நாயகனைத்" திறப்பு விழாவுக்கு முறைப்படி அழைக்காமல் அவமதித்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாத நிலை கலைஞர்க்கு இருந்தால் அ'து இயல்பு; ஆனால் கலைஞர் பெற்ற அவமதிப்பை வி.பி. சிங்கால் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையும், அவர் பெற்ற வெற்றியை வாழ்த்திக் கூறிய முறையும் கலைஞர் மேல் அவர் கொண்ட பேரன்பையும், பெருமதிப்பையும், பெருத்த நம்பிக்கையையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றன என்றால் அதில் மிகையில்லை. அவர் கூறியவை இவை:

"வள்ளுவர் கோட்ட நாயகன் (கலைஞர்) நட்ட அடிக்கல்லைத் தூக்கி எறிந்தவர்கள் மக்கள் மனத்தில் அவர் நட்ட அடிக்கல்லை அகற்ற முடியவில்லை."

"தனியதிகார ஆட்சி நடத்த நினைத்த இந்திரா கட்சியின் கை முறிக்கப் பட்டது. இந்த வெற்றியைப் பார்த்து தில்லி ஆட்சி பீடத்தில் உள்ளவர்கள் நடுநடுங்கிக் கொண்டு உள்ளார்கள். கட்சிக் கூடாரத்தில் அச்சமும் நடுக்கமும் ஏற்பட்டுள்ளன."

"கலைஞர் கறுப்புக் கண்ணாடி போட்டிருப்பதைப் பழித்துப் பேசிய இராசீவ், எழுச்சிக் கதிரவனின் (உதய சூரியனின்) ஒளிக் கதிர்களைப் பார்க்க முடியாமல் இராசீவ் கறுப்புக் கண்ணாடி போட்டுள்ளார்."

"இராசீவ் வெறும் தொலைக் காட்சித் தலைவர் தாம். கலைஞர்தாம் உண்மையான மக்கள் தலைவர்"

தேசிய முன்னணிச் செயலாளர் இராம விலாசு பசுவான் கலைஞரின் வெற்றியைக் காட்டி, இராசீவ் பதவி விலகக் கோரினார். "இந்தியா முழுவதும் இந்திரா கட்சி, மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டது, என்பதைத் தமிழகத் தேர்தல் முடிவு மெய்ப்பித்து விட்டது. எனவே இராசீவ் பதவி நாற்காலியில் ஒட்டிக் கொண்டிராமல் பதவி விலக வேண்டும்."

தி.மு.க. விடம் இந்திரா கட்சி தோற்றதை ஆந்திரா முதல்வர் என்.டி. இராமராவ் அடுக்கு

மொழியில் நையாண்டி செய்தார். "இனிமேல் இந்திரா பேராயப் பித்தலாட்டம் இங்கு செல்லாது. அலகாபாதும் தமிழ்நாடும் அரசியல் சாலையில் இரண்டு கற்கள். இக்கட்சியின் சூது, 'வாது'—இனி ஏது? மக்கள் காது அவர்களை நம்பாது"

கேரள முதல்வர் ஈ. கே. நாயனார் இப்படி மதிப்பிட்டார்: "இராசீவ் தமிழ்நாட்டிற்கு 12 தடவை வந்து போனார். அதனால் இந்திரா கட்சி படுதோல்வி அடைந்தது. கேரளா தேர்தலின் போது 54 தொகுதிகளில் அவர் பேசினார். அதனால் 50 தொகுதிகளில் தோற்றது. அவர் மேலும் மேலும் வந்து தோல்வியைத் தழுவ வேண்டும். பூட்டாசிங் கோடிக் கணக்கான பணமூட்டையுடன் வந்தார். அப்போதும் அது வெல்ல முடியவில்லை."

தலைவர்களின் இந்த மதிப்பீடு, வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் இந்திரா பேராயம் அடைந்துவரும் ஒட்டுமொத்த வீழ்ச்சியைக் குறித்த மதிப்பீடாகவே நாம் கருதிக் கொள்ள வேண்டும். இதில் ஒன்றை மட்டும் நாம் எண்ணி மகிழலாம். வட நாட்டுத் தலைவர்களும் வியந்து பாராட்டும் வண்ணம், கலைஞர் தமக்கு மக்களிடம் உள்ள மதிப்பை வெளிப்படுத்திக் காட்டவும், இராசீவ் ஆட்சியை அகற்றுவதற்குக் கலைஞரின் ஈடுபாடு எந்த வகையில் தங்களுக்குப் பயன்படும் என்பதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவும் தமிழகத்தின் தேர்தல் முடிவுகள் பயன்பட்டுள்ளன — என்பதே அது. இஃது அனைவருக்குமே மகிழ்ச்சியும் ஒரு நம்பிக்கையும் தரத்தக்கதாகும்.

வட நாட்டுத் தலைவர்களின் பாராட்டை நாம் மனத்தில் வாங்கிக் கொள்ளும் அதே நேரத்தில், தி.மு.க.வின் வெற்றி பற்றி நடுவண் அரசின் வெளிநாட்டுத்துறை அமைச்சர் கே. கே. திவாரி கூறியதையும் காதில் வாங்கிக் கொள்ள மறந்து விடக்கூடாது. அது, கலைஞரின் தமிழின வெற்றி, எதிரிகளை எந்த அதிர்வு உணர்வுக்கு ஆட்படுத்தியுள்ளது என்பதைக் கணித்துக் கொள்வதற்குப் பயன்படும். திவாரியின் மன வேக்காட்டைப் பாருங்கள்:

"வட்டார வெறி கொண்ட தி.மு.க. வெற்றி — நமது நாட்டின் — நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் கடுமையான ஊறுபாடுகளை விளைவிக்கும்... தி.மு.க. வெற்றி பற்றி ஆங்கில (இந்து) இதழ் முன் கூட்டியே கருத்தறிவித்திருந்தது நயன்மை (நீதி) அற்றது; அரசியல் உள்நோக்கம் கொண்டது."

எப்படியிருக்கிறது பார்த்தீர்களா, திவாரியின் கொதிப்பான கருத்து! இது திவாரியின் கருத்தன்று; வட நாட்டு வல்லாண்மை வெறியர்கள் அனைவரது கருத்துமே ஆகும். மக்களை ஆள்கின்ற உரிமை, வடநாட்டார் கைகளுக்குள்ளேயேதான் இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றனர்கள். அதனால் தான் இராசீவ் தம் தேர்தல் கூட்டங்களில் 'திராவிட' உணர்வை அடியோடு அழிக்க வேண்டும்' என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு மூலைக்கு மூலை வெறியுணர்வுடன் பேசி வந்தார். ஆனால், அவர்களின் கனவு வெறும் கானலாய்ப் போனது. அந்த எரிச்சலிலேயே திவாரி இவ்வாறு 'முகாரி' பாடி 'ஒப்பாரி' வைத்துள்ளார். '**நமது நாடு**' என்று திவாரி இந்தியாவைக் குறிப்பது '**ஆரிய நாடு**' என்னும் பொருளிலேயே ஆகும். நமது நாட்டின் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் கடுமையான ஊறுபாடுகளை விளைவிக்கும்' என்று அவர் குறிப்பிடுவது, இவ் விந்திய நாட்டின் நாகரிகமும் பண்பாடும் ஆரியர்களுடையன; அவை அழிந்து போய்விடக் கூடாது' என்னும் பொருளிலேயே ஆகும்: தமிழர்க்கே — அஃதாவது திராவிடர்க்கே உரிய நாகரிகத்தையும் பண்பாட்டையும் அவர்களுடையன என்று கருதிக் கொண்டே 'அவை அழிந்து விடக் கூடாது' என்று பசப்புகிறார் திவாரி. கலைஞர் இவற்றையெல்லாம் தமக்குக் கிடைத்த அதிகார மதர்ப்பில் மறந்து போய் விடக் கூடாது என்பதற்காகவே எச்சரிக்கையாகக் கூறுகிறோம்.

இனி, வட நாட்டு ஆட்சித் தலைவர்கள் மட்டுமன்று, தமிழகத்தில் உள்ள பார்ப்பனர்களும் கூட, தி.மு.க.வின் பொது வெற்றியையும் கலைஞரின் சிறப்பு வெற்றியையும், வரவேற்காததுடன், வெறுக்கவும் செய்கிறார்கள் என்பதையும் கலைஞர் எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டும். அரசு அலுவலகங்களில் பணியாற்றும் பார்ப்பனப் பெண்களெல்லாரும் தி.மு.க.வின் வெற்றி உறுதிப்படுத்தப் பெற்ற பொழுது, உடல் எரிச்சலும், மனக் கொதிப்பும் கொண்டு, வெளிப்படையாகவே, "*கருணாநிதி ஓராண்டுக்குத்தான் இருப்பான்; பிறகு மண்டையைப் போட்டு விடுவான்*" என்று அரற்றிக் கூறினர் என்றால், தமிழ்நாட்டுப் பார்ப்பனரின் ஒட்டுமொத்த வெறுப்பைப் பொதுவாக நாமும், குறிப்பாகக் கலைஞரும் விளங்கிக் கொள்ளுதல் நல்லது.

பார்ப்பனரின் ஒட்டுமொத்த உணர்வை ஓவ்வோர் அசைவிலும் வெளிப்படுத்திக் காட்டும் **தினமணி** நாளிதழில் கலைஞரின் வெற்றியைப் பல வகையிலும் இழிவு படுத்திக் கட்டுரைகள் வெளி வந்து கொண்டிருந்தன; இன்னும் வந்து கொண்டும் இருக்கின்றன.. அது மட்டுமன்றித் தங்கள் இனத்தின் படிநிகராளி(*பிரதிநிதி*)யான செயலலிதா ஒரு புறம் வெற்றி பெறவில்லை என்ற மனப் புழுக்கத்திலும், மறுபுறம் அவர் எதிர்க்கட்சித் தலைவராக வந்து விட்டார் என்ற எக்களிப்பிலும், கலைஞரின் வெற்றியைத் தாறுமாறாக மதிப்பிட்டுக் காட்டியும், செயலலிதாவின் மதிப்பை யானைமேல் ஏற்றிக் காட்டியும் திறனாய்வு செய்தும் எழுதியும்

Scanned with CamScanner

காட்டினர் கத்தூரிரங்கன் என்பார். அதில் கலைஞர் மேல் அவர்கள் கொண்ட விடாய்ப்பு வெளிப்பட்டது. அவர் எழுதிய கருத்துகளைக் கவனியுங்கள்.

"எம். ஜி. ஆர். தொண்டர்களின் பெரும் ஆதரவைப் பெற்றுத், தானே எம். ஜி. ஆரின் அரசியல் வாரிசு என்பதை நிருபித்து விட்டார், ஜெயலலிதா"
— தினமணி. 29-1-89.

(எப்படி இருக்கிறது, பாருங்கள்! — 'வாரிசு' என்று 'தினமணி' கூறினாலும், வேறு யார் கூறினாலும், சட்டப்படி என்ன விளக்கம் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால், அரசியல் எத்தர்களின் தகிடுதத்தப் பொருளைக் கூறிப் பொதுமக்களை ஏமாற்றப் பார்க்கிறது, 'தினமணி'! ம. கோ. இரா. வின் பெயரைக் கூறி 27 இடங்களைப் பெற்ற செயலலிதாவை அவருடைய 'வாரிசு' என்றால், 143 இடங்களைப் பெற்று அரசமைத்த கலைஞரை உண்மையான பெரியார், அண்ணா இவர்களின 'வாரிசு' என்பதை ஒப்புக் கொள்ளுமா, தினமணி? எப்படிப் பட்ட சூழ்ச்சியால் 'ஆரிய மாரீசை' ஆன செயலலிதாவைத் திராவிட(தமிழ்)இனத் தலைவியாக்கி மகிழ்கிறது, பார்ப்பனியம், பாருங்கள்!)

இனி, "ஜெயலலிதாவைப் பொறுத்தவரை தேர்தலில் பங்கேற்ற முதல் முயற்சியிலேயே அவருக்குக் 'காபினெட்' மந்திரி அந்தஸ்துடன் கூடிய எதிர்க்கட்சி அணித்தலைவர் என்ற பதவியும் கிடைத்து விட்டது" என்கிறது, தினமணி! மூப்பனார் கட்சியை விட ஒரே ஓர் இடத்தை அதிகமாகப் பெற்றதால், எளிமை(அற்ப)த் தனமாகக் கிடைத்த இப்பதவியைப் பெரிதாகப் பீற்றிப் பேசுகிறது, பார்ப்பனியம்!

அடுத்து, செயலலிதாவைக் கலைஞர் கருணாநிதியுடன் மோதுவதற்கு எப்படிக் கொம்பு சீவி விடுகிறார் தினமணியார் என்பதைக் கீழ்வரும் கூற்றுகளைப் பார்த்து உணர்ந்து கொள்ளுங்கள்.

"இதுவரை செயலலிதாவிற்கு அரசியல் ரீதியாகப் பதில் சொல்வதைக் கௌரவக் குறைவு என்று நினைத்திருந்த கருணாநிதி, இனி, நேருக்கு நேர் விடை சொல்ல வேண்டிய நிலையில் வைக்கப்பட்டுள்ளார்."

இவ் விடத்தில் தினமணியின் மதிப்பாண்மை மதிப்பீட்டை அன்பர்கள் கவனிக்க வேண்டும். செயலலிதாவிற்கு விடை சொல்வதை மதிப்பு (கௌரவ)க் குறைவாக நினைத்தாராம் கருணாநிதி! இப்படி மதிப்பிடுகிறது தினமணி. இதில் தினமணி, என்ன கருத்தை மக்களுக்குச் சொல்லாமல் சொல்கிறது என்றால்,

1. செயலலிதா 'கௌரவத்திற்கு' அதுவும் கலைஞரோடு ஒப்ப வைத்துப் பார்க்கும் 'கௌரவ'த்திற்கு உரியவர்.

2. அவருக்கு விடை சொல்வது கலைஞர் கடமை.

3. அவ்வாறு விடை சொல்லாமல் கலைஞர் கருணாநிதி செயலலிதாவைக் குறைவாக மதிப்பிட்டு விட்டார். அவ்வாறு மதிப்பிட்டதன் வழி கலைஞர் தம்மை செயலலிதாவிற்கு மேலாக மதித்துக் கொண்டார். ஆனால் செயலலிதாவிற்கு உள்ள மதிப்புத்தான் கலைஞர்க்கும் உண்டு. அவ்வாறு இருக்க இவர் ஏன் விடை சொல்லாமல் இருக்க வேண்டும்.?

4. இனி, அவ்வாறு இருக்க முடியாது. சட்டமன்றத்தில் கலைஞருக்கு நேருக்கு நேராக அமர்ந்து கொண்டு செயலலிதா கேட்கின்ற கேள்விகளுக்குக் கலைஞர் விடைசொல்லியே ஆக வேண்டிய நிலையில், கலைஞரை செயலலிதா வைத்துவிட்டார்.

— இவ்வாறெல்லாம் கிறுக்குத்தனமாகவும் திமிர்த்தனமாகவும் எழுதித் தன் இன மேலாண்மையை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. தினமணி!

கலைஞர் வெற்றிக்கும், செயலலிதா வெற்றிக்கும் தினமணி மதிப்பிட்டுக் கூறும்படி எந்தக் 'கௌரவ'மும் அவர்கள் முன்னே காலை நீட்டிப் படுத்துக் கிடக்க வேண்டிய தேவை என்ன வந்தது என்பது நமக்கு விளங்கவில்லை. இருவர் 'கௌரவ'த்தைப் பற்றியும் தினமணியாரை விட மக்களுக்கு நன்கு தெரியும். ஆனால் தினமணி என்ன கருதுகிறது? 'கலைஞரும் செயலலிதாவும் சம'கௌரவ' முள்ளவர்கள்; எனவே செயலலிதா கேட்கும் கேள்விகளுக்குக் கருணாநிதி விடை சொல்லியிருக்க வேண்டும்; அவ்வாறு விடை சொலலாதது கலைஞருக்குக் 'கௌரவ'க் குறைச்சல்' என்பது போல் கருதுகிறது, தினமணி!

இப்பொழுது சொல்லுங்கள்! அரசியல் நிலையில் செயலலிதாவும் கலைஞரும் ஒரே தரத்தினரா? அல்லது ஒரே 'கௌரவம்' உடையவர்களா? தேர்தல் போட்டியில் இருவரும் ஒரே போட்டியாளராக இருக்கலாம். ஆனால் அதற்காக இருவரையும் ஒன்றாக, ஒரே தட்டில் வைத்து மதிப்பிட்டு விட முடியுமா? அதனால் செயலலிதா கேட்கும் நாகரிகக் குறைவான அல்லது மதிக்கத் தகாத கேள்விகளுக்கெல்லாம், கலைஞர் விடை சொல்லியாக வேண்டும் என்பது கட்டாயமா?

செயலலிதா சொன்னார். "கருணாநிதியை ஆட்சிக்கு வர விட மாட்டேன்; என்ன விலை கொடுத்தாவது தடுத்தே தீர்வேன். கருணாநிதி தீய'சக்தி' அவரை முறியடிக்க சரியான ஆள் நான்தான்!"

இவ்வாறு சொன்ன செயலலிதாவிற்கு என்ன விடையைக் கலைஞர் தரவேண்டும் என்று தினமணியார் விரும்புகிறாரோ, தெரியவில்லை.

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

பறர்ப்பை அறிவன் பக்கம்!

1. சோற்றில் நனைந்தனரே!

'வெறுஞ்சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்'? நாட்டில் உணர்வுப் பஞ்சமாகி விட்டது. பஞ்சம் தமிழினத்தைத் தடுமாறப் பண்ணி விடுமோ? உழைப் பினால் உறுதிகளைப் பெறமுடியுமென்று அவன், நம்பிக்கை தளர்ந்து போனானா? நீண்ட புகழும், ஆண்ட பெருமையும் 'மறந்து' போனான் தமிழன். அதனை நினைவூட்டி விழுட்டி வளர்த்த உணர்ச்சி யைத் 'தேர்தல' வடிகட்டியில் ஒழுகவிட்டு விட்டார்கள். அடிமைப்பதவிக்கு ஆலாய்ப் பறக்கின்றனர். எதிர்ப்புணர்ச்சி இல்லைவிடும் இயக்கத்தை நசுக்கி விடுவதற்கு முனைப்பாகச் செயல்படும் ஆளும் பெருங்கும்பல்! இதற்கிடையில், உள்பூசலும், மடம்பிடுங்கிகளுக்கு மடி விரிக்கும் பசப்பாளர் களும் கூடி 'அடிமை; நான் நல்ல அடிமை' என்று தாளந்தட்டிக் கூத்தாடி எதிரி வகுப்பிடம் விழுந்து கிடக்கத் துடிக்கிறது ஒரு கூட்டம்!

'எவரையும்' ஏற்கமனமில்லை. என்றாலும், கொடிய மன ஆட்சிக் கேடர்களைச் சுட்டிக்காட்டி, ஒரு சார்பில் நின்று, திரட்டி, மோத வேண்டியவர்க ளாக உள்ளோம். தமிழனே, நீ, உன்னை விடுவிக்க, இந்த ஒருநிமையமும் சரியாகப் பயன்படுத்தக் கூடியதே. உன் ஆற்றல், வலிமை பற்றிச் சிந்தித் துச் செயல்படக் கற்றுக் கொள். சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் வென்று விட முயல்!

பாவலரேறு.. சிறுகச் சிறுகத் தமிழரிடையே ஊட்டிய எழுச்சிக்கனல் அவிந்து போகாது. அவர், இலெனின் கூறியபடி தாழப் பறந்தாலும் கழுகு போன்றவர். கோழியெனச் சாணியைக் கிளறிக் கிடப்பவர் அல்லர்! கழுகென்பதால்,'கோழி'யை விடத்தாழ்ந்து பறந்து மேலே பறக்கிறதிலும் கோழியை விட மேலே செல்ல வல்லவர்! கோழி எவ்வளவு முயன்றாலும், கழுகினைப் போல வானில் பறக்க வல்லதன்று!

தேர்தலில் தி.மு.கவை ஆதரிப்பதில் ***பாவலரேறு*** 'தவறு' செய்துவிட்டார்; தாழ்ந்து விட்டார் என்பவர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

"தட்டுத் தடுமாறி — உயிர்
தள்ளாடித் தள்ளாடி
எந்தமிழ்த் தாயினை

முட்டுக் கொடுத் தேற்றி — மலை
முகட்டினில் வைத்திட
நாளும் துடிக்கிறேன்"

என்ற ***'பாவலரேறு'*** கீழே இறங்கி, அமிழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்க்காக வருவதொன்றும் இழிவாகாது; பெருமையே ஆகும்!

2. தமிழ்க்குடி மகனார் வெற்றி...!

'என்னைவிட்டு ஓடிப் போக முடியுமா?' — காத லனோ காதலியோ பாடுவது. நீரடித்து நீர் விலகிப் போகுமா? உ.த.க, உ.த.மு.க வளர்ச்சிப் படிகளில் தமிழின வெற்றி உள்ளது.

தி.மு.க வை பாவலரேறு போற்றியதும், கலைஞரை 'எரிகின்ற கொள்ளியில் (நெருப்பினில்) எதிரிக்கு நெருப்பவர்' என இனஞ்சுட்டி வரவேற்றதும் அறிவோம்.

கல்லூரிமுதல்வர் தமிழ்க்குடிமகன், பண்டாரகர் ஆனார்; சட்டமன்ற நடுவர் ஆனார். நாம் மகிழ் கின்றோம்; வாழ்த்துகின்றோம்! புதிய கான்முளைகள் தி.மு. கழகத்தில். இதன் விளைவு, தமிழினத்தின் விழிப்பு எனலாம்! கலைஞரின் சரியான அணுகுமுறையை அனைவரும் வரவேற்பர்.

தாயெழில் தமிழைப் போற்றிடத்
தகும்பணி செய்திட
தூயதமிழ் வல்லவர் நம்குடி
மகனென வாழ்த்துவேன்!

இக்கால் உருவாகியுள்ள 'புதிய தமிழகம்' காணும் முயற்சிக்குச் சட்டவரம்புக்குள் நின்று அரசியல் புரிவதில் கலைஞர் ஆற்றல் மிக்கவர். அவர்க்குத் துணைநிற்கக் கல்வித்துறையிலிருந்து ஓர் ஆசிரியர் நிலையிலிருந்து தமிழ்க்குடி மகனார் செல்கிறார். இதனால் ஆசிரியர் இனத்திற்கு நன்மை வந்தெய்தும் என நம்புகின்றேன். 'தனியார் கல்வித்துறை'யை மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதை எதிர்ப்பதிலும், அங்குள்ள ஆசிரியர் மாணவர் உறவின் நேயத்தை வளர்ப்பதிலும் மு.த. முன்வருவாராகுக!

ஆசிரியர்கள் கல்வியைத் தருவதில் முழுவுரிமை பெற்றவராக விளங்கத் தனியார்துறை அடிமை நிலையை நீக்க வேண்டும்!

3. புரட்சிப் பண்ணை!

'நாம்தமிழர்' என்ற எழுச்சியை வளர்த்தார் சி.பா. ஆதித்தனார். அவரும் தி.மு.க.வில் கரைந்தார்... தமிழ்த் தேசியக் கட்சி கூட்டித் தி.மு.கவை விட்டுப் போய் வளர்ப்பேன் என்றவர், பேராயக் கட்சியில் கலந்தார்.

இந்த வரலாறுகள் மாறிப் பேராயக் கட்சியிலிருந்து, பழ. நெடுமாறன், சிவாசி கணேசன் விட்டு விலகித் தமிழர் தேசிய இயக்கம், தமிழக முன்னேற்ற முன்னணி தொடங்கியிருக்கிறார்கள்.

'தேசியம்' இப்போதுதான் பிடிபடத் தொடங்கியுள்ளது. தெளிவான முடிவுக்கு வருவதற்குத் தடையாகப் 'பலவகை'யான சிந்தனைகள் தோன்றிக் கொண்டுள்ளன.

எதன் பின்னே போனால் மாற்றம் பெறலாம்,ஏற்றம் எய்தலாம் என்று தேடிக் கொண்டிருக்கின்றனர் அறிவாளிகள்! (தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(தொடர் 2.) (முன் இதழ்த் தொடர்ச்சி)

தமிழ்த் தேசத்தின் திரிபாளர்கள் (Revisonists) யார்?

இவ்வரசு, தமிழன், — என இணையாதபடி, தமிழ் இன உணர்ச்சிக்குத் தடையாக 'இந்தியன்' — எனத் திணிப்பதும், தமிழ்மொழியாகிய தன் தாய் மொழியைக் கூட படிக்க விடாமல், 'இந்தி' மொழியைத் திணிப்பதும்,

சாதி வழியில் பிரிந்து கிடப்பதை நிலைப்படுத்துவதான நிலையில், சாதிய உணர்வுகளைத் தூண்டிவிட்டுத் தமிழ் இன உணர்வை மழுங்கடிப்பதும், தம் கருத்துப் பரப்புக் கருவிகளான தொலைக் காட்சி, வானொலி போன்றவற்றில் ஓயாமல், 'இந்தி' — இனப் பண்பாட்டையும், 'இந்தி' — மொழியையும் பரப்புவதுமாகவும், — இருந்து கொண்டுள்ளது.

இத்தகைய நிலையில்,

எதிரி என யார் யாரையெல்லாம் தமிழ் மக்கள் காணுகிறார்கள் என்றும், — ஏன் அங்ஙனம் காணுகின்றனர் என்பதையும் நாம் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

பொருளியல் நிலையில் :

O தமிழ் நாட்டிலிருந்து ஆண்டுக்கு ஏறத்தாழ 4000 — கோடி உருபா வட்டியாக மட்டும் தட்டிச் செல்லும் 'சேட்' — என்னும் மார்வாரிகளை, அவர்களால் தாக்குண்ட நடுத்தர, ஏழை மக்கள் எதிரிகளாகக் காணுகின்றனர்,

O வல்லாளுமை (அ) இந்தியத் துணை வல்லரசின் முதலாளிகளிடமோ அல்லது தமிழ்த்தேசத்தின் தமிழ்த்தேச முதலாளிகளிடமோ உழைத்து அதற்கான உண்மையான கூலியைப் பெறமுடியாமல் ஏழ்மையுற்றுக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்கள் இம் மேற்படி முதலாளிகளைத் தங்கள் தங்கள் எதிரிகளாகக் காணுகின்றனர்.

O வல்லாளுமை, இந்தியத் துணை வல்லரசு — ஆகியவற்றின் சார்பில் தமிழ் நாட்டு மக்களைச் சுரண்டிக் கொண்டு செல்வதால், தமிழ் நாட்டில் உள்ள தமிழ்த் தேச முதலாளிகள், தாம் முன்னுக்கு வர முடியாமல் அல்லல் படுகின்றனர். தான் மூலப் பணம் போட்டு ஒரு தொழில் தொடங்க முடியாமல் உள்ளனர். அப்படித் தொடங்கினாலும் — இம் மேற்கண்ட வல்லாளுமை, இந்தியத் துணைவல்லரசிய முதலாளிகள் அதை வளரவிடாமலும் செய்கின்றனர். தமிழ்த்தேச முதலாளி ஒருவன் ஒரு வழலைக் கட்டி (Soap) உருவாக்குவானானால், உடனே அதே விலைக்கு மிக நல்ல முறையில் இம் மேற்கண்ட முதலாளி (TaTa போன்று) ஒரு வழலைக்கட்டி செய்து விற்கிறான். எனவே தமிழ்தேச முதலாளி நலிவடைகின்றான். விற்பனைக்கான நிலம், சந்தை போன்றவை இம் மேற்கண்ட பிறநாட்டு முதலாளிகளுக்கு நிறையக் கிடைப்பதால், அவர்கள் விற்பனைச் சந்தையைப் பிடிப்பதற்காகத் தமக்குக் கிடைக்க வேண்டிய மொத்த ஊதியத்தில் குறைந்த ஊதியமே அடைகின்றனர். இத் தேசிய முதலாளி மேற்கண்ட முதலாளிகளால் நசுக்கப் படுவதால், வளர முடிவதில்லை. எனவே மிகப் பெரிய தொழிலகங்களோ, சிறு தொழிலகங்களோ, தமிழ்த் தேசிய முதலாளிகளால் தொடங்க முடிவதில்லை. எனவே தமிழ் இளைஞர்க்குத் தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பும் மிக மிகக் கடினமானதாக உள்ளது. இந்நிலையில் தேசிய முதலாளி, இம் மேற்கண்ட வல்லாளுமை, இந்தியத் துணை வல்லரசின் முதலாளிகளை எதிரிகளாகக் கருதுகின்றனர்.

குமுக நிலையில்:

O சாதிய நிலையில் நாடு பல பிளவுகளாகப் பிரிந்து கிடக்க ஒவ்வொருவரும் ஒவ்வொருவரையும் எதிரிகளாகக் கண்டு வருகின்றனர்.

O இங்கு பார்ப்பனர் அல்லாதார் பார்ப்பனரை எதிரியாகக் கருதுகின்றனர்.

O பார்ப்பனர் தவிர பிற மேல்சாதியினர் பார்ப்பனரை எதிரியாகக் கருதுகின்றனர்.

O பிற்படுத்தப்பட்ட மக்கள் மேல்சாதியினர் அனைவரையும் எதிரியாகக் கருதுகின்றனர்.

O தாழ்த்தப்பட்ட மக்கள் பிற்படுத்தப்பட்டோரை எதிரிகளாகக் கருதுகின்றனர்.

O இது வல்லாமல் பண்பாட்டடிப்படையில் வட இந்தியர், தென் இந்தியரை எதிர்மையாகக் கருதுகின்றனர்.

O இந்தியத் துணை வல்லரசிய அரசின் சூழ்ச்சி காரணமாகப் பிரிக்கப்பட்ட மொழி வழி மாநிலங்கள் வேண்டுமென்றே தேசிய இனங்களுக்குள்ளான முரண்பாட்டை உருவாக்கும் வகையில் பிரிக்கப்பட்டன. அதன் மூலம் எல்லைப்பகுதிகளில் தமிழர் - மலையாளியையும், தெலுங்கரையும் கன்னடரையும் எதிரிகளாகக் காணுகின்றனர்.

அரசியல் நிலையில்:

O இன்றைய இந்தியத்துணைவல்லரசின் அரசியல் அமைப்பில், அரசியல் கட்சிகளுக்கு இடையிலான எதிர்மையில், ஒவ்வொரு கட்சியும் இன்னொரு கட்சியை, அதன் உறுப்பினர்களை எதிரிகளாகக் காணுகின்றனர்.

O இவ்வாறு, காணப்படுகிற கட்சிகளுக்கு வேலை செய்ய வேண்டுவதற்காக மக்களைத் தமக்கு அடியாட்களாக அமர்த்திக் கொண்ட வகையில் அனைத்து மக்களும் தத்தமக்குள்ளாக உதிரித்தன்மையில் எதிரிகளாக்கப் பட்டுள்ளனர்.

Scanned with CamScanner

உழவு, பிற பொது நிலையில்:

O அரசு உறுதிப்படுத்துகிற விலையில் இல்லாமல், சற்று ஊதியத்துடன் செயல்படுகிற வணிகர்களை உழவர்கள் எதிரிகளாகக் காண்கின்றனர். (இங்கு அரசு உறுதி செய்வது என்பதே கொடுரமானது. தமிழ் நாட்டில் உழைக்கும் உழவனின் விளைச்சலின் செலவை உறுதிப்படுத்துவது தில்லியில் உள்ள ஐந்து விண்மீன விடுதிகளில் அமர்ந்து கொண்டுள்ள அதிகாரிகள்)

O விற்பனையில் ஊதியக் கொள்ளையடிப்பதாக வணிகர்களைப் பொதுமக்கள் எதிரிகளாகக் கருதுகின்றனர்.

O உழவர்களில் பெரு நிலவுடைமையாளர்களை - சிறு நிலவுடைமையாளர்கள் எதிரிகளாக எண்ணுகின்றனர்.

O சிறு நிலவுடைமையாளரை — நிலமற்ற கூலிகள் எதிரிகளாகக் கருதுகின்றனர்.

O கூலி உழவர்கள், கூலித் தொழிலாளர்களை நிறைய சம்பாதிப்பதாக எண்ணி எதிரியாக எண்ணுகின்றனர்.

O தொழிலகத் தொழிலாளர்கள். அலுவலக உழைப்பாளர்களை எதிரிகளாக எண்ணுகின்றனர்.

O தொழிலகத்தில், அலுவலகத்தில், காவல் துறையில் தம் மேல் அதிகாரிகளைக் கீழுள்ளவர்கள் எதிரிகளாகக் கருதுகின்றனர்.

O மாநிலக் காவல்துறையினர், மாநில அலுவலர்கள் நடுவண் காவல் துறையை, நடுவண் அலுவலரை தம்மைவிட நிறைய ஊதியம் வாங்குவதால் எதிரிகளாகக் கருதகின்றனர்.

— இது போன்ற எதிர்மை நிலைகள் ஏராளமாகத் தமிழ் நாட்டில் நிலவுகின்றன.

இப்படிப் பட்ட அக எதிர்மை நிலைகளில் பலவாறு முங்கியுள்ள தமிழரின் நிலையில் குளிர் காய்ந்து கொண்டுள்ளது — இந்திய அரசு.

ஆக, தமிழ் நாட்டு மக்களைப் பார்க்கும் பொழுது தமிழன் ஒவ்வொருவனும், ஒவ்வொரு வகையில் அடிமையுற்றே கிடக்கின்றான் என்பது உண்மை ஆகின்றது.

இங்கு கற்பனையாக — தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் தன் எதிரியை அழித்துக் கொள்ள ஓர் உரிமை அளிக்கப்படுமானால், தமிழ் நாட்டில் ஒருவன் கூட எஞ்ச முடியாது.

ஏறத்தாழ அனைவரும் கொல்லப்படலாம்; அல்லது பட்டிருக்கலாம்.

ஆனால், இந்த எதிர்மைத் தன்மைகள் அனைத்தும் சில அடிப்படையான எதிர்மைத் தன்மைகளின் துணையானவையே.

பெரு நிலவுடைமையாளர்களிடம் நில உயர் வரம்பு கட்டாயப்படுத்திக் குறைக்கப்பட்டு, நிலமற்றவர்க்கு நிலமாகக் கொடுப்பதின் மூலமோ, அல்லது, அரசுப் பொறுப்பேற்றுக் கூட்டுப்பண்ணை முறையில் இங்கு உழவுமுறைகள் நடைமுறைப் படுத்தப்பட்டு, உழவுக்கு அடிப்படையான நீர், வித்து, உரம் இவற்றை அரசே இலவயமாகக் கொடுத்துச் செயல் படுத்துமாயின், உழவர்கள் தொடர்பான அனைத்து எதிர்மை நிலைகளும் இங்கு மறைந்து போவது உறுதி.

இதுபோன்ற பல அரசியல், பொருளியல், குமுக உருமாற்றங்களால் இங்குக் காட்டப் பட்டுள்ள பல முரண்பாடுகளும், எதிர்மைத் தன்மைகளும் மறைந்து போவது உறுதி.

ஆனால், அந்த உருமாற்றங்கள் இன்றைய வல்லரசுகளுக்கும், இந்தியத் துணை வல்லரசின் முதலாளிகளுக்கும் கடும் எதிர்ப்பானது, அம் முதலாளியச் சார்புடைய இந்திய அரசு அதிகாரங்களுக்கு முற்றிலும் மாறானது. எனவே இந்திய அரசு இவற்றையெல்லாம் செயல் படுத்தவே படுத்தாது; மாறாக அதுபற்றிய எழுச்சியையும் கடுமையாக ஒடுக்கிவிடும்.

எனவே, தமிழ் நாட்டு அளவில் முழுமையான அதிகாரம் கொண்ட ஒரு மக்கள் அரசு அமையாமல், தமிழ் நாட்டில் அமைந்துள்ள இவ்வடிமைத் தனங்களின் விடுதலை என்பது பகற்கனவாகவே இருக்கும்.

ஆக, இன்றைக்குத் தமிழ் நாட்டளவில் முழு விடுதலைப்பெற்ற ஒரு மக்கள் அரசு அமைய வேண்டுமானால், 'தமிழ்நாடு' — இந்தியத் துணை வல்லரசிடமிருந்து விடுதலை அடைய வேண்டுவதே முதலானது ஆகும்.

இந்தியத் துணை வல்லரசிடமிருந்து விடுதலை பெறுவதின் மூலமே, இந்தியத் துணை வல்லரசின் முதலாளியத்தையும், இந்திய அரசின் மூலம் உள் புகுந்த வல்லாளுமையின் முதலாளியத்தையும் அறவே தமிழ் நாட்டிலிருந்து துடைத்தெறிய முடியும்.

இந்திய அரசிடமிருந்து, தமிழ் நாடு விடுதலை பெறுவதின் மூலமே — தமிழ் மக்களின் நலனில் ஆன ஒரு மக்கள் குடியரசு ஆட்சியையும், அதிலிருந்து ஒரு நிகரமைக் குடியரசு (Socialist) அமைப்பையும் நிறுவமுடியும் என்பது தெளிவு.

எனவே தமிழ் நாட்டில் உள்ள மக்கள் அனைவருக்கும் இன்றைக்கு இந்தியத் துணைவல்லரசே அனைத்து நிலைகளிலும் எதிரியாக நிற்கிறது. அதன் மூலமாக வல்லாளுமைகள் எதிரிகளாக நிற்கின்றன.

இன்றைக்குத் தமிழ் நாட்டில் உள்ள, தாங்கள் வளர முடியாமல் நசுக்கப்பட்டுள்ள தேசிய முதலாளிகள், அப் போராட்டத்திற்கு ஆன நட்பு ஆற்றல்களாக அமைவர்.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

அமெரிக்க இதழில் தமிழக விடுதலை பற்றிய செய்தி!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

தமிழர்களின் தமிழக விடுதலைக் கோரிக்கையைப் பற்றி இதுவரையிலும் அமெரிக்க மக்களுக்குத் தெரியாது. அமெரிக்கத் தாளிகைகள் சீக்கியரின (Sikhs) விடுதலைக் கோரிக்கையைப் பற்றிய செய்திகளை வெளியிடும் போது, ஒரு காலத்தில் தமிழ்க்கட்சியொன்று தமிழக விடுதலையைக் கேட்டதென்றும், கால் நூற்றாண்டுக்கு முன் அக்கோரிக்கையை அக்கட்சி கைவிட்டு விட்டதென்றும் குறிப்பிடுவதுண்டு. (1963-இல் தி.மு.க.வின் தலைவர்கள் திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டமையையே இப்படிக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன்.) இன்றும் தமிழ்நெஞ்சினர் பலரின் (தி.மு.க, அ.தி.மு.க உறுப்பினர் பலர் உட்பட) நெஞ்சங்களில் தமிழக விடுதலை வேட்கை முகிழ்த்துக் கொண்டு தானிருக்கிறதென்பதையும், **தென்மொழி** ஆசிரியர் **பெருஞ்சித்திரனார்** முப்பதாண்டுக் காலமாகத் தொடர்ந்து தமிழக விடுதலைக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் அமெரிக்கர் அறியார் ஆனால் அண்மையில் 'நியூயார்க்கு டைம்சு' (New York Times) என்ற அமெரிக்கத் தாளிகையில் தமிழக விடுதலைக் கோரிக்கை குறித்த செய்தியொன்று வெளிவந்தது ''தமிழ் இளைஞர் சிலர் தமிழ்நாட்டை இந்தியாவினின்று விடுவிக்க வேண்டுமென்று (Liberating Tamil Nadu from India) கூறிப் படை தூக்கத் துணிந்துள்ளார்கள்'' என்று கூறியது அந்தத் தாளிகை.

'நியூயார்க்கு டைம்சு' என்னும் தாளிகை, அமெரிக்காவிலேயே மிகப் பெரிய நகரான நியூயார்க்கு நகரிலிருந்து (New York city) வெளியிடப் படுகிறது. உலக ஒன்றிப்பு நாட்டவையின் (United nations) தலைமை அலுவலகம் இந்நகரில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அந்நகரில் மட்டுமல்லாமல், அமெரிக்கா முழுமையாக இத்தாளிகை விற்கப்படுகிறது. இத்தாளிகையை அமெரிக்காவிலுள்ள நூலகங்கள் அனைத்திலும் காணலாம். அமெரிக்க அரசின் உள்நாட்டுத்துறை, வெளிநாட்டுத்துறை மற்றும் படைத்துறையிலுள்ள உயர்நிலை அலுவலர்கள் (senior officers) இத் தாளிகையைப் படிக்கத் தவறுவதில்லை. மேலும், உருசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வெளிநாட்டுத் துறையின் (foreign affairs) உயர்நிலை அலுவலர்கள் இத்தாளிகையைத் தவறாமல் படிக்கிறார்கள். அத்துணை சாய்காலும், பெயரும், புகழும் படைத்த தாளிகையிது. அத்தகைய தாளிகை தமிழக விடுதலை குறித்த செய்தியை வெளியிட்டது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். தமிழனின் தமிழக விடுதலைக்குரல் உலக அரங்கிலும் கேட்கத் தொடங்கி விட்டது.

வாழ்க தமிழகம்! வெல்க தமிழினம்! 0

7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைக்குத் தமிழ் நாட்டில் வேலைவாய்ப்பின்மைக்கான அடிப்படைக் காரணமாகத் தமிழ் நாட்டின் தேசிய முதலாளிகளிடம் வளர்ச்சி இன்மையே உள்ளது.

தமிழ் நாட்டின் பொருளியல் சுழற்சி, தமிழ் நாட்டில் அல்லாமல், பிற நாடுகளுக்கும் கொள்ளையடித்துச் செல்லப்படுகின்றது. எனவே இங்கு ஏழ்மைத் தன்மையும், விலையேற்றமும் அதிகமாகிக் கொண்டே உள்ளன.

எனவே, இந்த வல்லாளுமைகளின், இந்தியத் துணை வல்லரசின் முதலாளியத்தின் வீக்கங்களை அழித்தொழிக்க வேண்டுமானால், தமிழ்த்தேசிய முதலாளிகளை வளர்க்க வேண்டியுள்ளது.

ஒரு சிறு பற்பசையோ, வழலைக்கட்டியோ கூட, தமிழ் முதலாளிகளிடம் இல்லை. தமிழ் நாட்டில் விற்பனையாகும் அனைத்தும் இந்திய, பிற நாட்டு வல்லாளுமை முதலாளிகளினால் உருவாக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு, ஊதியம் கொள்ளையடிக்கப்படுகிறது.

எனவே,தேசிய முதலாளிகளை வளர்க்க வேண்டிய கட்டாயம் தமிழ் மக்களின் மீது விழுந்துள்ளது.

ஆனால், அத் தேசிய முதலாளிகள் எழுந்து புரட்சி செய்து தமிழக விடுதலையைப் பெற மாட்டார்கள். காரணம் *இழப்பதற்குப் பொருளுள்ளவன் போராட வர மாட்டான்.*

ஆக, இழப்பதற்கு ஏதும் இல்லாமல் அடிமையாக உள்ள, தமிழ் உழைப்பாளிகளே தமிழ் நாட்டு விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி எடுத்துச் செல்ல வேண்டியவர்களாகிறனர்.

அவர்களுக்குத் துணையாகவே, இத் தமிழ்த் தேசிய முதலாளிகள் அமைவர் என்பது உண்மையாகின்றது.

ஆக, தமிழ் நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டத்தை எடுக்க வேண்டியவர் தமிழ்நாட்டு உழைக்கும் மக்கள் என்றும், அவர்களின் நட்பாளர்கள் தமிழ்த் தேசிய முதலாளிகள் என்றும், அவர்களின் எதிரி —இந்தியத் துணை வல்லரசும், அதன் வழியே வல்லாண்மை அரசுகளும் என்பதிலும் தெளிவான நாம், திரிபாளர்கள் பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது. (தொடரும்.)

Scanned with CamScanner

தொடர்: 7

இதழ் 115-இன் தொடர்ச்சி.

தமிழகத்தில் புதிய குடியரசுப் புரட்சி!

புதுக்குடியிருப்புச் சுரண்டல் வடிவத்தில் சிறுபான்மை தேசிய இனமக்கள் வல்லரசுகள், மற்றும் இந்தியா ஆளும் பிரிவினத்தால் கடுமையாகச் சுரண்டப்பட்டும், நசுக்கப்பட்டும் தங்களின் தனித்தன்மையை இழந்து வருகிறார்கள். இக்கொடுமைகளில் இருந்து விடுபட்டுத் தங்கள் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொள்ள நடத்தும் இம்மக்களின் போராட்டம் தமிழ்த் தேசிய இனமக்களின் விடுதலைப் போராட்டத்துடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

வல்லரசு நாடுகளின் சுரண்டல் வல்லாண்மையையும் இந்தியா ஆளும் பிரிவினத்தின் சுரண்டல் வல்லாண்மையையும் நிலைநாட்டி வளர்க்கும் பொருட்டு இந்தி மொழியை நடுவண் அரசு எல்லாத் தேசிய இனமக்கள் மீதும் திணித்து வருகின்றது இதன் தொடர்ச்சியாகத் தமிழக மக்கள் மீதும் திணிக்கிறது. இது தமிழ் மொழியின் அறிவியல் முறையிலான வளர்ச்சியையும் தமிழக மக்கள் பண்பாட்டையும் சீர் அழிக்கிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தமிழக விடுதலைப் போராட்டத்துடன் இணைக்க வேண்டும்.

வல்லரசு எதிர்ப்புத் தன்மை வாய்ந்த தேசிய இனவிடுதலைப் போராட்டத்தின் முகாமையான மூன்று கருவிகள்: ஒன்று ஒன்றிய (ஐக்கிய) முன்னணி. மற்ற இரண்டு கட்சி, மக்கள்படை என்பன. தொழிலாளர் பிரிவைத் தலைமையின் கீழ்க் கட்டியமைக்கப்பட வேண்டும். தமிழகத்தில் தொழிலாளர் பிரிவினம (பாட்டாளிப் பிரிவினம்) புதிய குடிநாயகப் புரட்சியின் முகாமை ஆற்றலும் தலைமையும் ஆகும். தொழிலின் அடிப்படையில் பல்வேறு பகுதியாகப் பிரிந்து இருக்கும் தொழிலாளர் பிரிவினம் (மரபு வழியாகத் தொழில் செய்பவர்கள், தோட்டத் தொழிலாளர்கள், உழவுத் தொழிலாளர்கள்) தனித் தனியாக ஒன்றுபட்டுப் பொதுவுடைமைக் கட்சிமூலமாக ஒன்றிணைக்கப்பட வேண்டியுள்ளது. இந்தத் தொழிலாளர் பிரிவை முன்னணிப் படையின் முன் முயற்சியின் மூலமாகத்தான் வறிய — நடுத்தட்டு உழவர்கள், குட்டி முதலாளியப் பகுதியினரையும் முன்னணியின் பகுதியாக்கப்பட வேண்டியுள்ளது. விரிவான வல்லரசு எதிர்ப்பு முன்னணி உருவாக்கும் போது மட்டும்தான் ஏழை நடுத்தட்டுச் சிறு முதலாளிய பகுதியைச் சார்ந்தவர்கள் இத்தகைய முன்னணியில் பங்கெடுக்கக் கூடும்.

இத்தகைய முன்னணி கட்டுவது பல கட்டங்களாவும் தனித்தனிச் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்ட போராட்டங்களுடன் இணைந்து உருவாகும். இருப்பினும் தேசிய இன விடுதலையின் அரசியலுமாகத் தொடர்பு கொண்டு மட்டுமே அதை ஓர் உண்மையான தேசிய விடுதலை முன்னணியாக வளர்க்க முடியும். இந்த முன்னணியை உறுதிப் படுத்தவும், விரிவுபடுத்தவும் செய்வது, மக்கள் போரை விரிவு படுததுவதை ஒட்டியே முடியும்.

வல்லரசு ஆற்றல்களுக்கும், இந்தியா அரசுக்கும் எதிரான இந்தியத் துணைக்கண்ட தேசிய இனமக்களின் விடுதலைப் போராட்டத்துடன் தோளோடு தோள் சேர்ந்து நடத்தக்கூடிய தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டம் நீண்ட கால மக்கள் போரின் மூலமாகவே வெற்றி பெறமுடியும். தேசிய இன விடுதலை முன்னணியின் ஒவ்வொரு பகுதி அமைப்பும், மக்கள் குழுவின் வடிவத்தில் இருக்கக்கூடிய மாற்று அரசியல் அதிகார நடுவங்களாக வளர்ந்து அத்துடன் இணைக்கப்பட்ட கருவி தாங்கிய பிரிவுகளின் கொரில்லாப் போராட்ட முறையின் வாயிலாக விரிவடையும். மக்கள் போரில் கொரில்லாப் போராட்டம் முகாமையான போராட்ட வடிவமாகும். அதே வேளையில் தமிழகத்தில் ஒன்று திரட்டப்பட்ட தொழிலாளிப் பிரிவு ஆற்றல்கள் முகாமை ஆற்றலாக இருக்கும் முகாமை இடங்களில் இந்தத் தொழிலாளிப் பிரிவின் முன் முயற்சியின் கீழ் நடைபெறக்கூடிய கருவி தாங்கிய எழுச்சிகளுக்கான வாய்ப்புகளையும் நாம் ஆய்வு செய்ய வேண்டும்; இவ்வாய்ப்புகள் சார்பாக இருந்தால் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கருவி எழுச்சிக்கான வாய்ப்புகளைப் போர்த் தந்திர அடிப்படையில் பயன்படுத்திக் கொரில்லாப் போராட்ட முறையை நீண்ட கால அடிப்படையில் பயன்படுத்தக்கூடிய மக்கள் போர்த் தந்திரம் தான் தமிழகத்தில் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் முகாமைப் போராட்ட வடிவமாகும்.

தமிழக மக்கள் குடிநாயக அரசு பின்வரும் கடமைகளை நடைமுறையில் கொண்டுவரும்:

1. பிற நாட்டு முலமுதலுடன் இணைந்துள்ள வங்கிகளையும், மற்ற நிறுவனங்களையும் பறிமுதல் செய்வதுடன் அனைத்துப் பிற கடன்களையும் தவிர்ப்புச் செய்யும் சிற்றூர்களில் கந்து வட்டி முறையையும் ஒழிக்கும்.

2. தரகு அதிகாரப் பிரிவு முதலாளிகளின் அனைத்து உடைமை நிறுவனங்களையும் பறிமுதல் செய்யும்.

3. எல்லாப் பொருளும் தோட்டங்களையும் (எஸ்டேட்டுகள்) பறிமுதல் செய்வதுடன் தொழிலாளர்களின் முன் முயற்சியின் கீழான கூட்டுறவு நடுவங்களின் தலைமையில் மறுசீரமைப்பு செய்யப்படும்.

(தொடரும்.)

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களோ, அன்றாடத் தேவைகளுக்காக அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்! இவர்களின் தொடர்ச்சியான தாக்குதலைத் தாங்கித் தளர்ந்து கொண்டிருக்கிற ஆளும் கூட்டம், தன்னை நிலைப்படுத்திக் கொள்ளப் புதிய உத்திகளைக் கையாள்கின்றது.

நாம் 'கருப்பென்றும் சிவப்பென்றும்' வேற்றுமை பாராட்டிக் கொண்டிருக்கிறோமா? இல்லை. நம்மிடம் இந்த வேற்றுமை நாடகம் தொடர்ந்தாலும், திட்டவட்டமான வகுப்புணர்வின்றிக் கருப்பு, சிவப்பாகும், சிவப்பு கருப்பாகும். கோலம் பல புனைந்து தெளிவற்ற திசைநோக்கி ஓடி அலமந்து கொண்டிருக்கின்றோம்!

தலைமைகள், மக்கள் நலன்களை நடுப்படுத்தாமல், தங்களை முன்னிறுத்தியே இயக்கம் கட்டி வருகின்றன.

ஒருங்கிணைப்பு, ஒற்றுமை என்பதெல்லாம் போலிமையே. உண்மையான,சரியான போராட்டம் நடத்திட புதிய பாதையை அமைத்துக் கொள்ளுதலே இன்றைய கடமையாகவுள்ளது!

தமிழன், சாதியை ஏணியாகக் கட்டி உயர்ந்து விட முடியாது. சாதி தகர்ந்திடத் தகர்ந்திடத்தான் தமிழன் என்ற உணர்வு மேலோங்கும் என நம்பலாம்!

அதற்கான வலிவான அரசியல் போராட்டம், தமிழகப் பொருளியல், பண்பாட்டியல் குறித்த முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

நான்கு சுவர் நடுவே சிந்தனைப் பரிகளைத் தட்டிவிட்டுப் பயணம் போவதோ, மனம் போன படியெல்லாம், தமிழனைத் தட்டிக் கொடுக்கும் தாராளப் போக்கோ, முரணான சமய நம்பிக்கைகளோடு உடன்போய், புரட்சியைக் காதலிக்கும் இயலாமை, புலம்பல், ஆசையோ நம் இன மேன்மைக்கு உதவப் போவதில்லை.

புதிய முயற்சிகள், தமிழனைத் தாழ்த்திய பழைய தடங்களை விட்டொதுக்கி மேற்கொள்ளுதல் வேண்டும்.

வாயருமை பேசி, நடைமுறையில் சிதைவுற்றுக் கிடப்பதைத் தமிழர் ஓர்ந்துணர்தல் வேண்டும்.

எதிரிகளின் மாயவுரைகளில் மயங்காமல், நமக்மெனவுள்ள எழுச்சியுறு சிந்தனைகளை நடைமுறைப்படுத்திடல் வேண்டும்.

பழைய கட்டுமானங்களைக் காப்பதால் நம் புதிய விடியல் தோன்றாமலே போய்விடக் கூடும். கண்டிப்பான தேசிய இன நலன்களைச் சார்ந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டு உலகத் தமிழின ஒற்றுமையைப் பெறுவோம்.

போலிமையான விடுதலை நோக்கம், தன்னலத்தால் திசைமாறிட வாய்ப்புண்டாகும்!

அனைத்து வகையாலும் எண்ணி, இன்றுள்ள ஆற்றல்களை இணைத்து வளர்த்துக் கொள்ள முயல்வோம்.

நடைபோடும் போது,எதிர்வரும் நலிவுகளுக்கு அஞ்சாமல், துன்பம் உறவரும் என்பதால் அதனை இயல்பென்று கருதிச் செயல் படுதல் வேண்டும்.

உலக மேன்மைகளை நம் தமிழகத்தில் கற்றுச் செயல்படுத்துவோம்! அதே வேளை, தமிழகம் பெற்றுள்ள சாரமான கருத்துகளைப் புரட்சிப் பண்ணையில் வித்திட்டு — நாற்றங்காலில் வளர்த்துப் புதிய விளைவு செய்வோம்.

தமிழியல், தமிழக வரலாறு, தமிழியக்கங்களின் செயல்பாடு குறித்து ஆராய்வதும், கற்றுத் தெளிவதும் செய்வோம்.

தமிழின வாழ்வு தழைத்திட வேண்டி
அமிழா வுணர்வுடன் ஆக்கம் பெறவே
உழைப்போம் புதிய உறுதிகள் எல்லாம்
விளைவுற வேண்டிய செய்வோம் விழைந்து.

என் மனச் சிறை ஆளும் தோழன் --

சொல்லும் திறனறிவான் — தமிழ்ச்
சூலின் இயல்பறிவான்.
வாழ்வின் பொருளறிவான் — தமிழ்
தாழின் கனன்றெழுவான்.

பாட்டில் சுடர்ந்திடுவான் — பண்
பாட்டில் தலையிருப்பான்.
தனை இனத் திற்களித்துத் — தன்
மானம் தழைத்திருப்பான்
தன்வயம் இழந்தறியான் — தமிழ்
வெல்வழி புரிந்திருப்பான்.
பாவலரே றெனப்படுவான் — தமிழ்
இனத்தின் அடியாயிருப்பான்.

அடிப்படை அவனுகவே — தமிழ்
இடித்திட வான்தழுவிடுமே!
கொடி,படை இலையெனினும் — மனச்
சிறையினில் ஆண்டிருப்பான்!

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

— அமைச்சர்.

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி).

அந்த அம்மையாருக்குப் பரிந்து கொண்டு, தினமணியில் கத்தூரிரங்கன், அவரின் எதிர் காலத்தை இவ்வாறு கணித்து எழுதுகிறார். அவரைத் தூக்கிக் கொண்டையத்தில் வைத்துக் கும்மாளமிடுகிறார். அவர் எழுதவில்லை;ஆரியம் எழுதுகிறது, இப்படி:

"கருணாநிதியைத் தனது முதல் எதிரி என்று வருணித்து வந்த அவர் சட்டப் பேரவையில் தி. மு. க. எதிர்ப்பாளர்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை வைத்துக் கொண்டு, மக்களிடையே தனது எதிர்ப்பாற்றலைக் காண்பித்து, அடுத்த தேர்தலில் தனது ஆதரவை உயர்த்திக் கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பும் அவருக்குக் கிடைத்திருக்கிறது" — தினமணி: 29-1-88
(கத்தூரிரங்கன் கட்டுரை.)

'தினமணி' என்ன எதிர்பார்க்கிறது என்பதை இதுவரை எடுத்துக் காட்டப் பெற்ற கத்தூரிரங்கனின் கட்டுரைப் பகுதிகளை ஊன்றிப் படிப்பவர்கள் நன்கு விளங்கிக கொள்ள முடியும்.

மொத்தத்தில் கருணாநிதியை — அவர் வழியாகத் தமிழினத்தை விழ்த்துவதற்காகவே தென்னக அரசியலில் செயலலிதா வளர்க்கப் பெற்றும் வலுப்படுத்தப்பெற்றும் வருகிறார். மற்றப்படி ம. கோ. இரா. வின் பிறங்கடை (வாரிசு) என்றும், ம. கோ. இரா. அரசை அவர் மீண்டும் தோற்றுவிப்பார் என்பவெல்லாம் — பொய் — பச்சைப் பொய்!

ம.கோ.இரா.வை வைத்துத் தமிழின உணர்வுகளை அழித்து விடலாம் என்று கனவு கண்டது தில்லி! ம. கோ. இரா. வும் அதற்கு ஒத்து நாடகமாடினார்! ஆனால் அது நடைபெறவில்லை. இனி அவர்களுக்கு அதற்கென கிடைத்த ஓர் ஆரிய உருவம் செயலலிதா! இதில் மூப்பனாரின் தனி வெற்றியையும், இந்திரா பேராயத்தின் பெருந் தோல்வியையும் கூடப் பெரிதாகக் கருதவில்லை, பார்ப்பனியம்! செயலலிதாவை வைத்தே அடுத்த ஐந்தாண்டிற்குள் தமிழினத்தை முழு அடிமை இனமாகச் செய்து விட வேண்டும் என்பதே ஆரியப் பார்ப்பனியத்தின் உள்விளர்ந்த திட்டம்!

இந்த நிலையில்தான் எதிரிகள் என்ன நினைக்கிறார்கள்; நாம் எப்படி எப்படி விழிப்பாயிருக்க வேண்டும் என்பதைக் கலைஞர் கருணாநிதி நினைத்துக் கொண்டே செயல்பட்டு வர வேண்டும் என்று நாம் அவரை எச்சரிக்க விரும்புகிறோம்! அவர் **தேர்தலில் வெற்றி பெற்று அரசமைத்தது பெரிதில்லை. இந்த வெற்றியைத் தமிழினத்தின் வெற்றியாக — தமிழ்மொழியின் வெற்றியாக — தமிழ் நாட்டின் வெற்றியாக மாற்றிக் காட்டுவதற்கு அவர் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்; அதில் அவர் இதுவரை இல்லாத வகையில் மிக மிக விழிப்பாயிருக்க வேண்டும்—என்று அவரை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்! அரசாட்சி செய்வது இயல்பு. ஆனால் ஓர் அடிப்படையான நோக்கம் வெற்றி பெறுவதற்கென அரசாட்சியைத் திட்டமிட்டுக் கொண்டு செலுத்துவது கடினம்; மிகக் கடினம்! அந்த மிகக் கடினமான பணியைச் செய்வதற்குத்தான் கலைஞர் ஆட்சியில் அமரவேண்டும் என்று நாம் மனதார விரும்பினோம்; வரவேற்றோம். அந்த நல்ல நோக்கம் வெற்றி பெறாமல் போகுமானால்,அவர் அரசமைத்தும் பயனில்லை; அரசு நடத்தியும் பயனில்லை. இந்தத் தலைமுறையோடு தமிழின மீட்பு முயற்சி தவிர்ந்து விடுமோ என்று கூட நமக்கு ஓர் அச்சம் இருந்து கொண்டே உள்ளது. இதைத் தவற விட்டால் கலைஞர் மேல்தான் அந்தப் பழிவந்து சேரும் என்பதைக் கலைஞர் நன்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.**

இனி, தேர்தல் முடிவுகளை வைத்து அரசியல் நோக்கர்கள் பலரும் பலவாறு கணிப்புச் செய்கிறார்கள். தேர்தல் முடிவு தெரிந்த அன்றே, சென்னைத் தொலைக் காட்சியில் பார்ப்பன இளைஞர் ஒருவரை வைத்து அடிக்கடி, தி.மு.க.வின் வெற்றியைப் பல கோணங்களில் குறைத்தும் இழித்தும் மதிப்பிட்டுப் பேசச் செய்தார்கள். ஒப்போலைகளின் எண்ணிக்கையையும் விழுக்காட்டையும் வைத்து ஒப்பிட்டுப் பார்த்து, தி.மு.க. வுக்கு ஆதரவு தந்தவர்களை விட (33%) தராதவர்களின் எண்ணிக்கையே (67%) அதிகமாக உள்ளதெனப் பன்னிப் பன்னிக் கூறுகின்றனர்.

குடியரசு அமைப்பில் வெற்றிக்குரிய பெரும்பான்மை என்பதே 51 விழுக்காடுதான். தோல்விக்குரிய சிறுபான்மை என்பதே 49%தான். இப்படிப்பட்ட நிலை இருவரே போட்டியிடும் பொழுதுதான் கிடைக்க முடியும். இருவர்க்கு மேல் போட்டியிடுவோர் எண்ணிக்கை கூடுகிறபொழுது ஒப்போலைகள் பிரியவே செய்யும். இருவரே போட்டியிடும் ஒரு நிலை குடியரசுத் தேர்தலில் என்றும் எந்த நாட்டிலும் இருக்கவே முடியாது. ஓட்டப் பந்தயத்தில் ஓடியவர்களுள் முதலில் வந்தவர் யார் என்பதுதான் போட்டியில் கவனிக்கப்பட வேண்டியதே தவிர, ஓர் அடி முன், இரண்டு அடி முன் என்று பேசுவது பித்தலாட்டம். தேர்தல் போட்டியின் முறையும் அவ்வாறானதன்று.

செயலலிதா அணியும் இந்திரா அணியும் ஒன்று சேர்ந்திருந்தால் தி. மு. க.வைத் தோற்கடித்திருக்கலாம் — என்பது ஒரு சிலரின் மன ஏக்கம்! அதற்குக் கலைஞர் கொடுத்திருந்த எதிர்

...ஆக இருந்தது! அதற்குக் மீசை முளைத்திருந்தால்' என்னும் சிறுபிள்ளைத் தனமான கற்பனை அது! அப்பொழுதும் சிற்றப்பன், பெற்றப்பனாகி விட முடியாது. பார்ப்பனர்கள் தாங்கள் எதிர்பார்த்த அல்லது எதிர்பார்த்தவர்கள் வெற்றி பெறவில்லை என்பதற்காகத் தூணைத் துரும்பாக்கிப் பேசி இகழ்வார்கள். வெற்றிபெற்று விட்டால் துரும்பைத் தூணாக்கிப் புகழ்வார்கள்! அவர்களின் இயல்பு அது!

இனி, இந்து முன்னணி என்னும் பெயருடைய பார்ப்பன இயக்கத் தலைமை இவ்வெற்றியை வேறு வகையாகக் கணித்திருந்தது. ''திராவிடர் கழகத்தையும், இந்திய ஒன்றிய முசுலீம்லீக் கட்சியையும் ஒதுக்கியதுதான் தி.மு.க. வெற்றிக்கு ஓர் அடித்தளமாக அமைந்தது'' என்பது அத்தலைமையின் பேராசை கலந்த எதிர்பார்ப்பு! எண்ணெயும் எண்ணெயும் ஒன்றுசேரும் பொழுது, தண்ணீரும் தண்ணீரும் ஒன்று சேர்வதில் என்ன தடை வந்தது? பார்ப்பனர்களுக்கு எவ்வளவோ பழைமை ஆசைகள்! அவை அத்தனையும் நிறைவேறும் அளவிற்கு மற்றவர்கள் என்றுமே இளித்த வாயர்களாக இருந்துவிட மாட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டு தன்னளவில் அந்த ஆசையை அடக்கப் பயின்று கொள்ள வேண்டும். இல்லெனில் அவர்களின் முதலுக்கே முழுக்குப்போட வேண்டியதாக ஆகிவிடும்!

ஆக, கலைஞரைப் பொறுத்த வரையில் அவர் இத்தனை வகையான சூழ்ச்சிகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் ஈடுகொடுத்து நிலை நிற்பதென்பது ஒரு முயற்சி! இவற்றிலிருந்து தமிழினத்தை மீட்டெடுத்து அடிமைத்தனமும் அறியாமையும் இல்லாத ஒரு தனி உரிமை இனமாக மாற்றி நிலை பெறச் செய்வதென்பது ஒரு முயற்சி! இம் முயற்சிகளுக்கு அ.தி.மு.க. வின் உதிரித்தலைவர்களோ, உதிர்ந்து போன தலைவர்களோ என்றுமே துணை வந்து விட மாட்டார்கள்! நீண்ட நெடும் மரபு முறை கொண்ட நெடுஞ்செழியனே நெட்டுக்கு விழ்ந்து மண்ணைக் கவ்வியபின், அங்குள்ளவர்கள் குட்டையும் கட்டையுமான குறவன் குறத்தியர்களே! அவர்களைக் கலைஞர் எள்ளளவேனும் பொருட்படுத்தவோ, எதிர்பார்க்கவோ மாட்டார் என்று நம்புகிறோம்! அடுத்து, விடணர்களும், பிரகலாதன்களும் தமிழினத்தில் என்றென்றும், காலத்துக்குக் காலம் வேறு வேறு பெயர்களுடன், காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் இரண்டகர்களாக - முப்பர்களாக - சிதம்பரங்களாக - இராமமூர்த்திகளாக — பக்தவத்சல — சுப்பிரமணிய — செயகாந்தன்களாகப் பிறவியெடுத்துக் கொண்டேதாம் இருப்பர், எனவே அவர்களைப் பற்றியும் கலைஞர் அரண்டு விடவோ, மருண்டு விடவோ, அஞ்சி விடவோ மாட்டார் என்றும் எதிர்பார்க்கிறோம். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பதையும், 'நன்மையும் தீமையும் தாம்தர வருமே' என்பவற்றையும் கலைஞர் படித்திருக்க வேண்டும். அவற்றையும் அவர் மறந்துவிட மாட்டார் என்றும் நம்புகிறோம்.

(தொடரும்.)

..த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 33

..தியால் வரும் பணிச் சலுகைகளை நாம் ..ரும்பினால், அதன் குமுகாய நன்மைகளைப் ..ர்ப்பனர் விரும்புவதில் என்ன தவறு?

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 116:

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

பெறுநர்: நூல் அஞ்சல்

திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5

TN/MS (C) 657